For all Ceremonies
At your homes
Our Service available

**OLI ILLAM**

210, MAIN STREET,
(Near St. James Church)
JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

தகர பந்தல், கதிரைகள், சில்வர் கப், பீங்கான் இன்னும் பல உபகரணங்களை வாடகைக்கு பெற நாடுங்கள்

"ஒளி இல்லம்"

210, பிரதான வீதி,
(யாகப்பர் ஆலய மருங்கில்)
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 27 செவ்வாய்க்கிழமை (11– 01 – 1994) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 46

## வடக்கை யுத்தப் பிராந்தியமாக பிரகடனப்படுத்த அரசு திட்டம்

### யுத்த கால விதிகளை அமுல் செய்யவும் முஸ்தீபு

யாழ்ப்பாணம், ஜன. 11

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னர் வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள படையினர் திட்டமிட்டுள்ளனர்.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று இவ்வாறு தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பாரிய இராணுவ நடவடிக்கைக்கான திட்டங்கள் தற்போது தாயாராகி வருவதாகவும்—

பெரும்பாலும் வடபகுதி யுத்தப் பிராந்தியமாகப் பிரகடனப் படுத்தப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும்—

திட்டமிடப்பட்ட யுத்தம் நடைபெறும் போது, வடக்கில் யுத்தகால விதிகளை அரசு அமுல் செய்யலாம் என்றும் நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

[உ-5]

முச்சந்தி முரளி



அப்ப பழி ஓரிடம் பாவம் ஓரிடம் எண்ட மாதிரித்தான் சிசிலின்ரை சிக்கல்......!

## பூநகரியில் சிக்கிய சிப்பாய்; புலிகள் நேற்று விடுவிப்பு!

### மனிதாபிமான அடிப்படையில் தலைவர் வழங்கிய உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 11

பூநகரிச் சமரில் காயமடைந்து — விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு — யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த சிங்கள சிப்பாய் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கேகாலையைச் சேர்ந்த ரஞ்சித் குணசேகரா (வயது 25) என்பவரே விடுதலை செய்யப்பட்டார்.

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் இவர் விடுதலை செய்யப்பட்டார். இந்த சிப்பாய் கொழும்பில் மேலதிக சிகிச்சை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு மனிதாபிமான அடிப்படையில் தலைவர் இந்த முடிவை எடுத்தார் என்று அறிவிக்கப்பட்டது.

கஜபாகு ரெஜிமெண்டில் லான்ஸ் கோப்பிரலாக பதவி வகித்தவர் இச்சிப்பாய் எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் விடுவிக்கப்பட்ட சிப்பாயை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. செற்றிக் பில்லாவிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சிப்பாய் பருத்தித்துறையில் தரித்து நின்ற மாஹோா கப்பல் மூலம் நேற்று பிற்பகலே காங்கேசன்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அவர் அங்கிருந்து பலாலிக்கு கூட்டிச் செல்லப்பட்டு அங்கிருந்து விமானத்தில் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டார்.

# வடபகுதி இராணுவக் கட்டளைப்பீடமே பூநகரிப் படுதோல்விக்கு முழுக் காரணம்!

## மேஜர் ஜெனரல் உட்பட 20 அதிகாரிகள் மீது ராணுவ விசாரணை மன்றம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜனவரி 11

பூநகரி இராணுவ – கடற்படைக் கூட்டுத் தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவத்துக்கு இராணுவத்தின் முழு வடபகுதிக் கட்டளைப் பீடமுமே பொறுப்பேற்க வேண்டும்,

– இவ்வாறு இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய இராணுவ விசாரணை மன்றம் தனது அறிக்கையில் குற்றம் சுமத்தியிருக்கிறது,

மேஜர் ஜெனரல் மற்றும் பிரிகேடியர், கேணல் தரத்தில் உள்ள ஏழு உயர் அதிகாரிகளும் மற்றும் 13 கப்டன்களும் இத்தோல்விக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் விசாரணை மன்றம் தெரிவித்திருக்கிறது.

பூநகரி கூட்டுப்படைத் தளம் அழிக்கப்பட்டது குறித்து விசாரணை நடத்திய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இராணுவ விசாரணை மன்றம் இரண்டு மாத காலத்தின் பின்னர் தனது 160 பக்க அறிக்கையை ஜனாதிபதி டி. பி விஜேதுங்க விடமும், புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவிடமும் கையளித்துள்ளது.

### முடிவு எடுக்கும் பொறுப்பு ஜனாதிபதி, தளபதியிடம்

பூநகரி இராணுவ விசாரணை மன்றம் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதை ஜனாதிபதியும், புதிய இராணுவத் தளபதியுமே தீர்மானிக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது.

குற்றம் சுமத்தப்பட்ட அதிகாரிகளை இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதா அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதா என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### புலிகளுக்கும் புகழாரம்

இராணுவ விசாரணை மன்றம் பல பார்வையாளர்களுக்குத் தெரிந்த விஷயம் ஒன்றைக் குறிப்பிட்டிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

''இலட்சிய வேகம் கொண்ட விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் தனது உத்திகளை மறு பரிசீலனை செய்யவேண்டும்'' — என்று இராணுவ நீதிமன்றம் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதையே பி.பி.ஸி. இவ்வாறு சுட்டிக்காட்டியது.

பூநகரி கூட்டுப்படைத் தளம் அழிக்கப்பட்ட போது அறுநூறுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததும், மேலும் பல நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் காணாமற் போனதும், பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதும் தெரிந்தவையே.

வடமாகாண தளபதி மேஜர் ஜெனரல் தளுவத்த, இராணுவ உளவுப் பிரிவுத் தலைவர் பிரிகேடியர் பரகல்ல மற்றும் ஐந்து உயர் அதிகாரிகள், 13 கப்டன்கள் ஆகியோர் மீதே குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

இந்த அதிகாரிகள் தாக்குதலைத் தடுக்கத் தவறிவிட்டதாக அறிக்கை குற்றம் சாட்டுகிறது.

### மற்றவர்களின் தவறுக்காக நான் தண்டிக்கப்பட்டேன்

### சிசில் வைத்தியரத்னா கூறுகிறார்

''தவறு செய்த மற்றவர்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கும் போது நான் மட்டும்தண்டிக்கப்பட்டிருக்கிறேன். இதனையே இராணுவ விசாரணை அறிக்கைகாட்டுகின்றது''

—இவ்வாறு கூறினார் கடந்த முதலாம் திகதி முதல் ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா.

பூநகரிப் படுதோல்வியை அடுத்து இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டதும்—

இதனால் அரச உயர்பீடத்துக்கும் அவருக்கும் இடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றம் சாட்டப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவது சந்தேகமே!

கொழும்பு, ஜன. 11

பூநகரி படுதோல்விக்கு காரணமானவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இராணுவ அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

இந்தக் கேள்விக்கு பல்வேறு தரப்பட்ட பதில்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன

பூநகரி படுதோல்வியை அடுத்து இராணுவத் தளபதியே பதவி விலக வேண்டி ஏற்பட்டது. இந்நிலையில் விசாரணை அறிக்கைப்படி நடவடிக்கை எடுத்தால் அது இராணுவத்தை மேலும் பாதிக்கும் என்பதால் அரசு அப்படியான நடவடிக்கை எதனையும் எடுக்காது என்று செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

படையினர் உற்சாகம் குன்றியிருக்கிறார்கள். இந்த வேளையில் இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதோ அல்லது அவர்களைப் பதவி இறக்குவதோ கஷ்டமான காரியம் என்று பி.பி.ஸி குறிப்பிட்டது.

இராணுவ அதிகாரிகளுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. இந்த நிலையில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் அதிகாரிகளை இழக்க அரசு விரும்புமா என்பது சந்தேகமே என்று ஏ.எவ்.பி செய்தியாளர் குறிப்பிட்டார்.

ஆனால்—

இதுவரை யுத்தமுனைக்கு அனுப்பப்பட்டு, யுத்தத்தில் நேரடியாகப் பாதிக்கப்பட்டுவரும் கீழ்மட்ட சிப்பாய்கள், யுத்த தோல்விக்கு மேல்மட்ட அதிகாரிகள் பொறுப்பாக்கப்படுவதை வரவேற்பார்கள் என்றும் அவர் சொன்னார்.

### அமைச்சரவையில் விரைவில் மாற்றம்

## செல்லச்சாமிக்கு அமைச்சர் பதவி?

யாழ்ப்பாணம், ஜன. 11

அமைச்சரவையில் அடுத்த மாதத்தில் சில மாற்றங்கள் செய்யப்படலாம் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கல்வி அமைச்சு, நீதி நிர்வாகம், பொது நிர்வாகம் ஆகிய அமைச்சுக்களிலேயே — நடைபெற இருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முன்னர் மாற்றங்கள் நிகழலாம் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

தற்போது இராஜாங்க அமைச்சர் பதவியில் இருக்கும் எம். எஸ். செல்லச்சாமிக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவி வழங்கப்படக்கூடும் என்றும் ஊகம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரான செல்லச்சாமி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சூரியகந்த புதைகுழிப் பயங்கரம்

## 2 மாணவரின் மண்டை ஓடுகள் அடையாளம் காணப்பட்டன

### மற்றொருவரின் சாரத்தை மனைவி இனம் காட்டினார்

கொழும்பு, ஜன. 11

சூரியகந்த மலைப் பகுதி புதைகுழிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள மனித மண்டை ஓடுகள், எலும்புகள், உடைகள் முதலானவற்றை அடையாளங் காணும் பணி நேற்று காலை எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றில் ஆரம்பமானது.

காணாமற் போன மாணவர்களின் பெற்றோரும் உறவினர்களுமாக சுமார் 800 பேர் கலந்து கொண்டனர்.

இரு மண்டை ஓடுகளும் ஒரு சாரமும் அடையாளங் காணப்பட்டன.

காணமற்போன தமது கணவர் எஸ். ஏ. பிரேமசிரி கைது செய்யப்பட்டபோது அணிந்திருந்ததாகக் கூறி சாரத்தை எம்பிலிப்பிட்டியா வளலாவிற்றையைச் சேர்ந்த திருமதி எஸ். டபிள்யு. நோனாவதி அடையாளங்காட்டினார்.

எம்பிலிபிட்டிய, ஹிங்குராவேயைச் சேர்ந்த திருமதி கே. ஜி. சுமணாவதியும் திரு. ஆர். எம். பியதிஸ்ஸவும் தங்களின் 17 வயது மகள் உபுல் சாந்தியுடையது என மண்டை ஓடு ஒன்றை அடையாளங் காட்டினர். உபுல் சாந்தி, கித்துக்கல்லாவை கனிஷ்ட வித்தியாலயத்தில் மாணவர் தலைவியாக இருந்தார்.

செல்வி சமரதிவாகே விக்கிரமசிங்க சீதா தமது மருமகனான வயது 19 சுனில் விக்கிரமசிங்கா என்ற மாணவனின் மண்டை ஓட்டை அடையாளங் காட்டினார்.

இவ் விரு மாணவர்களின்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 11

பூநகரிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று படையினருடன் ஏற்பட்ட திடீர் மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் சிவகாந்த் (மூர்த்தி சாமிநாதன்—உயிலங்குளம், மன்னார்) என்பவர் வீரச்சாவடைந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மற்றொரு போராளியான மேஜர் சுகு (அருணாசலம் மகேந்திரன்—செங்கலடி, மட்டக்களப்பு) என்பவர் நேற்றுக் காலை சுகவீனம் காரணமாக வீரச்சாவு அடைந்தார். (உ-5)

### தென்மராட்சியில் ஹெலித் தாக்கு

தென்மராட்சி, ஜன 11

தென்மராட்சிப் பகுதியின் பல இடங்களில் நேற்றுக் காலை ஹெலிகொப்டர் ஒன்று கண்மூடித்தனமாக தாக்குதலை நடத்தியது.

காலை 7.15 மணிக்கு பளை—அல்லிப்பளைக் கடற்கரையில் நின்ற மீன்பிடிப் படகுகளை நோக்கியும், காலை 7.40 மணிக்கு கண்டிவீதியில் மிருசுவில் ஆஸ்பத்திரிக்கு சமீபமாக சென்ற பயணிகள் வாகனத்தின் மீதும் ஹெலிகொப்டர் 50 கலிபர் தாக்குதலை நடத்தியது எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (உ-15-117)

### அடையாளம் காண உதவிய

## சட்டத்தரணியை நோக்கி திடீர் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜன. 11

சூரியகந்தவில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளை அடையாளம் காண்பதற்கு உதவிய சட்டத்தரணியை நோக்கி நேற்று துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். அவரின் கார் பலத்த சேதமடைந்தது

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான முறைப்பாட்டாளர்களின் சட்டத்தரணி எஸ். ஏ. பிரேமரத்தினா பயணஞ் செய்த காரின் மீதே இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர்.

நேற்று எம்பிலிபிட்டிய மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் எலும்புக்கூடுகள் அடையாளங் காணப்படுட் பணிக்கு உதவிய பின்னர் அவர் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் அவரின் கார் மீது கொடகெவல பொலீஸ் பிரிவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகள் இயக்கம் அரசு மீது கண்டனம்

கொழும்பு, ஜன. 11

சூரியகந்தவில் புதைகுழியில் இருந்து எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அரசு நடந்து கொள்ளும் முறையை மனித உரிமைகள் அமைப்புகள் கண்டித்துள்ளன.

சூரியகந்த விவகாரத்தை அரசு கையாளும் முறையில் இருந்து நீதி, ஜனநாயகம் ஆகியவை குறித்து அது எவ்வளவு அக்கறை காட்டுகிறது என்பது தெரியவருகிறது என பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் முன்னணி தெரிவித்திருக்கிறது.

மனித உரிமைகள் இயக்கம் வெளியிட்டுள்ள இரண்டு பக்க அறிக்கையில் —

8 ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் கண்டு பிடிக்கப்பட்ட புதைகுழிகள் பற்றி சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அங்கு புதைக்கப்பட்டிருந்த சடலங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## 6ஆவது மாவட்ட நீதிமன்றம் புதுக்குடியிருப்பில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 11

தமிழீழத்தின் ஆறாவது மாவட்ட நீதிமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி திரு. சாலமன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் மங்களவிளக்கை ஏற்றினார்.

நீதிமன்றப் பெயர்ப் பலகையை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசனும், நீதிமன்றக் கட்டடத்தை முல்லை

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**மலிவு விற்பனை**

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. இலவசமாக நேர அட்டவணை வழங்கப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (சி-6892)

**கோழிக்குஞ்சு விற்பனை**

Prima Lohman Brown இரண்டு மாத வயது உடன் விற்பனைக்குண்டு. இல. 29, மோகனகாந்தன் வீதி, சுவாட்ஸ் லேன், கச்சேரியடி (ஆசீர்வாதம் அச்சகம் முன்பாக). (28871)

**பழங்கள் தேவை**

உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். Taste Line Industries (Pvt ) Ltd , 14, Seenier Lane, Jaffna. (28797)

**காணி தேவை**

தொழில் முயற்சி ஒன்றிற்கு யாழ். நகரில் இருந்து சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்குள் வெறும் காணி தேவை. குத்தகை அல்லது வாடகையை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு; இல. 588, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28870)

**SPOKEN ENGLISH**

Spoken English With Grammar கற்பிக்கப்படுகிறது. மக்கள் வங்கிப் பரீட்சைக்கும் முழுமையான பயிற்சியும் அளிக்கப்படுகிறது. Lectures by V. N. Kandasamy, 87, திருநெல்வேலி றோட் (றயில் கடவைக்கு அருகில்) கொக்குவில். (சி-7020)

## நவீன மாதிரி பாடசாலை

யாழ்ப்பாணம், ஜன. 11

புதிய யுக்திகளுடன் கூடிய நவீன மாதிரிப் பாலர் பாடசாலை ஒன்று முன்னைய கந்தர்மடம் பண்டிதர் சரணாலயத்தில் நிர்மாணிக்கப்பட உள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் நிர்மாணிக்கப்படவுள்ள இப்பாலர் பாடசாலை வெளிநாடுகளில் பாலர் பாடசாலைகள் எவ்வாறு செயல்படுகின்றனவோ அதே மாதிரி வடிவிலேயே நிர்மாணிக்கப்பட உள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஏற்கனவே 150 பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் அதன் எண்ணிக்கை 175 ஆக உயர்த்தப்பட்டு புதிய யுக்திகளும் அறிமுகப்படுத்தப்பட உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த—162)

### பன்னத் தொழில் செய்ய நிதி உதவி

வலிகாமம் தெற்கு, ஜன 11

'ஜனசவிய' திட்டத்தின் கீழ் வசதியற்ற 37 குடும்பங்களுக்கு மாகியப்பிட்டிக் கிராம அலுவலர் பிரிவில் பன்னத் தொழில் மேற்கொள்ளும் பொருட்டு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது குடும்ப அங்கத்தவர் தொகைக்கேற்ப இந்த நிதி உதவி வழங்கப்பட்டது (க-152)


வர்த்தகமும், கணக்கியலும்

1994 ரிவுக்கான பல் நேர வகுப்புக்கள்

ஆசிரியர்; இராஜகிருஷ்ணர் இரகுநாதன்

ஆரம்பம்: 13 01—1994 வியாழன் காலை 11 மணி

NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

★ அனுமதி நேர அட்டவணை என்பவற்றுக்கு தொடர்பு கொள்க. (சி 7019)



யாழ். மாவட்ட

## அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் கழகங்களைப் பதிவு செய்தல்

★ மெய்வல்லுநர் நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் பங்குபற்றும் கழகங்கள் நாளை 12 — 01 — 1994 முதல் எதிர்வரும் 21 — 01 — 1994 வரை யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவதற்காக விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பக் கட்டணம் ரூபா 100 00

★ வருடச் சந்தா ரூபா 50-00

★ விண்ணப்பப் படிவங்களைப்பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கப்டன் என். சோமசுந்தரம்.
உப தலைவர், யா. மா. அ மெ. சங்கம்,
45, யாழ். இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

★ சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 06 — 02 — 1 94 காலை 9-30 மணிக்கு நடைபெறும்.

செயலாளர்.
யாழ் மாவட்ட அமெச்சூர் - மெய்வல்லுநர் சங்கம்

11-01-1994 [சி-6946]



## அஸ்ரன் கல்வி நிலையம்

1994 ஆம் கல்வியாண்டுக்குரிய புதிய வகுப்புக்கள்


11, 10, 9, 8, 7 நடைபெறுகின்றன

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | திருப்புகழ் |
| கணிதம் | — | திருப்புலியூர் |
| தமிழ் | — | பண்டிதர் வேலாயுதபிள்ளை |
| சமூகக்கல்வியும் | | |
| வரலாறும் | — | சுபேஷன் |
| வர்த்தகம் | — | சத்தியபாலன் |
| ஆங்கிலம் | — | பகிரதன் |

O/L (Day Class) பகல் நேர வகுப்புக்களும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும். [சி-7021]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

''நின்றநின் பெருமை நித்தமும் நினைந்தோம்''



மண்ணில்: 04 — 08 — 1903

விண்ணில்: 23 — 12 — 1992

நயினை

### அமரர் சுப்பர் குமாரசாமி (சு. கு)

திதி: 11 — 01 — 1994

''ஊர்உற்றார் போற்ற உத்தமனாய் வாழ்ந்திருந்து நீர் உற்ற நிழலாய் நின்றதனை மறப்போமா''

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

நல்லூர். (28843)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 12 08 — 1941

மறைவு: 22 — 12 — 1992

திதி: 11 — 01 — 994

### அமரர் இளையதம்பி நடராஜா

பாசமிகு தந்தையே! பண்புமிகு தெய்வமே! பக்தியின் சிகரமே! எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தி விண் சென்று விண்ணில் இருந்து எம்மைக்காக்கும் தெய்வமே! ஆண்டு ஒன்றாகியும் என்ன, ஈராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உமை என்றும் மறவாத பாசமிகு;

மனைவி [illegible]

கைதடி மத்தி, கைதடி. [illegible]

# வாகரை சுற்றி வளைப்பு 500 தமிழர்கள் கைது!

## பனடோல், தீப்பெட்டி எடுத்துச் செல்ல தடை

கொழும்பு, ஜன. 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 500 தமிழர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 4ஆம் திகதி படையினர் வாகரைப் பகுதியைச் சுற்றி வளைத்து அவர்களைக் கைது செய்து வாகரை முகாமுக்குக் கொண்டு சென்றனர் என்றும் —

எத்தனை பேர் விசாரணையின் பின்னர் தடுத்து வைக்கப்பட்டனர் என்பது தெரியவில்லை என்றும் கூறப்பட்டது.

இதனிடையில் —

வாகரைப் பகுதியில் பொது மக்கள் டிஸ்பிரின், பனடோல் மற்றும் தீப்பெட்டி எடுத்துச் செல்ல படையினர் தடை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒருவர் இரண்டு கொத்து அரிசிக்கு மேல் எடுத்துச் செல்ல படையினர் அனுமதி மறுப்பதால், மக்கள் சிரமப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

போரதீவுப் பகுதியில் வெல்லாவெளி அதிரடிப்படையினரால் கடந்த 30ஆம் திகதி கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் சித்திரவதையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ–எ)

## மாவீரருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன. 11

வீரவேங்கை ராஜீவின் 9 ஆம் ஆண்டு நினைவுதினம் சமீபத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில் ஆவரங்கால் பகுதியில் ஸ்ரீலங்கா ராணுவத்துடனான முற்றுகைச் சமரின்போது கப்டன் பண்டிதருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 6 மாவீரர்களில் வீரவேங்கை ராஜீவும் ஒருவர் ஆவார்.

கல்வியங்காடு சந்தியில் உள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்துக்கு அருகில் இது தொடர்பான வைபவம் நடைபெற்றது.

இந்த வைபவத்தின்போது ராஜீவின் தந்தை ராஜீவின் திருவுருவப்படத்துக்கு மலர் மாலை சூட்டினார்.

ஏனைய மாவீரர்களுக்கும் இந்த நிகழ்ச்சியின்போது அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ)

## பம்பாய் வெங்காய விதை உற்பத்தி

யாழ்ப்பாணம், ஜன. 11

செம்பியன்பற்று, அராலி ஆகிய இடங்களில் பம்பாய் வெங்காய விதையை பரீட்சார்த்தமாக உற்பத்தி செய்யும் பணி ஆரம்பித்துள்ளது.

பம்பாய் வெங்காய விதை தற்பொழுது தென் பகுதியில் இருந்து தருவிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க-17)

### வீதி விளக்குகள்

வடமராட்சி, ஜன. 11

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் வீதி விளக்குகள் எரியத் தொடங்கியுள்ளன.

முதற்கட்டமாக நகரின் முக்கிய இடங்களில் ஒரு சில வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. (த-173-109)

## பாதிக்கப்பட்ட மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 11

1992 ஆம் 93 ஆம் கல்வி ஆண்டுக்கு பல்கலைக் கழக அனுமதி பெறும் விடயத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பாக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3 30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது. (இ-5)

## இன்று

யாழ். விஞ்ஞான சங்கம் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தும் விஞ்ஞான நிகழ்ச்சி இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (க-30-162)

## நல்லை. ஆதீன முதல்வர் இரங்கல்:

# நடமாடும் தெய்வம் காஞ்சிப் பெரியார்

## இவரை என்றும் மறவோம்

யாழ்ப்பாணம், ஜன. 11

''நடமாடும் தெய்வமாக நூற்றாண்டு நிறைவாழ்வு வாழ்ந்த காஞ்சிப்பெரியவரை நாம் என்றும் மறவோம்''

முத்தி அடைந்த காஞ்சிப் பெரியாருக்கு இரங்கல் தெரிவித்து நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

தமது இரங்கல் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காஞ்சிப் பெரியவரை நாம் கண்ணாரக் கண்டு வணங்கி ஆசிகள் பெற்றது எமது பாக்கியம்.

சைவமக்கள் மட்டுமல்லாது எல்லோரும் உய்வு பெற தம் மாலான அறிவுரைகள், சொற்பொழிவுகள் மற்றும் தொண்டுகள் பலவற்றிலும் அவர் ஈடுபட்டு வந்தார்.

எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்து தெய்வமாகப் பூஜிக்கப்பெற்ற அந்தப் பெரியவரை நாம் என்றென்றும் மறவோம்.

அன்னாரின் தெய்வீக ஜீவாத்மா பரமானந்த நிலை எய்த அனைவரும் பிரார்த்திப்போமாக — என்று தெரிவித்துள்ளார். (இ-3)

## பணிப்புரையைப் புறக்கணித்து

# சீருடையின்றி கடமைபுரியும் ஆஸ்பத்திரிச் சிற்றூழியர்கள்!

யாழ்ப்பாணம், ஜன, 11

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சிற்றூழியர்கள் சீருடை தரித்தே கடமையாற்ற வேண்டும் என்ற நிர்வாகத்தின் பணிப்புரையை குறிப்பிட்ட சிலர் தூக்கி எறிந்து நடப்பதாக குறை கூறப்படுகிறது.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சிற்றூழியர்கள் சீருடை தரித்தே கடமையாற்ற வேண்டும் என்பது பொது விதி யாழ். ஆஸ்பத்திரியில் இந்தப் பொது விதி இதுவரை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் சிற்றூழியர் சீருடை தரித்தே கடமை செய்ய வேண்டும் என்றும்—

சீருடை தரிக்காதவர்கள் வரவு இடாப்பில் ஒப்பமிட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும்— நிர்வாகம் பணித்திருந்தது

அதனை ஏற்றுப் பெரும்பாலான ஊழியர்கள் சீருடை தரித்தே கடமையாற்றுகிறார்கள் ஆனால் குறிப்பிட்ட சிலர் பணிப்புரையை மீறி சீருடை இன்றியே பணிபுரிகின்றனர்.

பத்து நாட்களுக்கு மேலாகியும் இந்தப் புறக்கணிப்புக் குழுவினர் மீது நடவடிக்கை எடுக்கப்படாமையால், இவர்கள் யாரோ ஓர் உயர் அதிகாரியின் ''செல்லப்பிள்ளைகளாக'' இருக்கிறார்களா என்ற கேள்வி ஆஸ்பத்திரி வட்டாரங்களில் பரவலாக எழுப்பப்படுகிறது. [அ-15-17]


அதிர்ஷ்டகரமாக பெயரமைத்தலுக்கான

## எண் ஜோதிடம்

ஒவ்வோர் எண்களில் பிறந்தவர்களின் பலன்கள், குணாம்சங்களுடன்; உங்கள் பெயர் அதிர்ஷ்டகரமானதா? பிறக்கும் குழந்தைகளுக்கு எவருடைய உதவியுமின்றி நீங்களே அதிர்ஷ்டகரமாகப் பெயர் சூட்டுவதற்கும், ஒவ்வொருவரின் உருவ அமைப்பு, விளக்கங்களுடனும், இன்னும் பல அம்சங்களுடனும் வெளிவந்துவிட்டது. எக்காலத்திற்கும் உதவக்கூடிய சஞ்சிகை.

விற்பனையாளர்கள்; பூபாலசிங்கம் புத்தகசாலையில் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை ரூபா 25/- மட்டுமே

வெளியீடு: ஸ்ரீவாணி

[6900]



## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க

யாழ். கிளைத் தலைமையகம்

## பயிற்சி நெறிகள் - 1994

கீழ்வரும் இலவச பகுதிநேர வார இறுதி வகுப்புப் பயிற்சி நெறிகள் யாழ். கிளைத் தலைமையகத்தில் நடத்தப்படவுள்ளன. பயில விரும்புவோர் குறைந்தது க. பொ. த. சாதாரண பரீட்சையில் கீழ்வரும் ஒவ்வொரு பயிற்சி நெறியின் நேராகவுள்ள அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ள பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து — (தமிழில் திறமைச் சித்தி)

ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து — (ஆங்கிலத்தில் திறமைச் சித்தி)

சமூகநலனும் சமுதாய சேவையும் — (தமிழ், ஆங்கிலம், கணிதம் சித்தி)

முதல் உதவி — (சுகாதாரம் சித்தி)

ஆரம்ப சுகாதாரம் — (சுகாதாரம் / சமூகவியல் சித்தி, உதவித் தாதி பயிற்சி பெற்றோருக்கு முன்னுரிமை)

உதவித் தாதி — (சுகாதாரம் சித்தி)

மருந்தாளர் பயிற்சி (Dispenser's Course) — (தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் சித்தி)

ஆங்கிலம்

ஓவியம், சிற்பம், சித்திரம்

விண்ணப்பங்களை நாம் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுத் தலைவரின் சிபாரிசுடன் எமக்கு 20-01-94ற்கு முன்பாக அனுப்பிவைக்கவும் இதற்காக 22-01-1994 முற்பகல் 9 மணிக்கு தலைமையகத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சான்றிதழ்களுடன் சமுகந்தரவும். 29-01-1994இல் இப் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகும். பயிற்சி முடிவில நடைபெறும் பரீட்சையில் சித்தியடைவோருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10 - 01 - 1994 [சி-6949)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ். கிளைத் தலைமையகம்,

## பிரிவுத் தேர்தல்-1994

பிரிவுத் தேர்தல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கீழ் இயங்கும் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும, பளைப் பிரிவிலும். 27 — 03 — 1994 ஆம் திகதி நடைபெறவுள்ள பிரிவுப் பொதுச் சபைக் கூட்டத்தில் நடைபெறும். 1994 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை பிரிவுகளில் 11 — 02 — 1994 க்கு முன்னதாகச் செலுத்தி, பிரிவினால் 12—02—1994க்கு முன்னதாக யாழ். கிளையில் செலுத்திய துரித உறுப்பினர்களும், ஏனைய ஆயுள் உறுப்பினருமே இத்தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ, பங்குபற்றவோ, தகுதியுடையோராவர். செயற்குழு உறுப்பினர்கள் பதவிக்கான நியமனப்பத்திரங்கள் 06 — 03 — 1994 தொடக்கம் அவ்வப் பிரிவுப் பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாம். 13 — 03 — 1994 மு. ப 9-00 மணி தொடக்கம் பி.ப. 4-00 மணி வரை நியமனப் பத்திரங்கள் பிரிவுக் காரியாலயங்களில் ஏற்றுக் கொள்ளப்படும். 15 — 03 — 1994 மு ப 9-00 மணி தொடக்கம் பி.ப 4-00 மணி வரை நியமனப் பத்திரங்கள் பிரிவுக் காரியாலயங்களில் வாபஸ் பெற்றுக் கொள்ளலாம். 27 — 03 — 1994 மு.ப. 10-00 மணிக்கு நடைபெறவுள்ள அவ்வப் பிரிவு பொதுச்சபைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மூவர் அடங்கிய தேர்தல் குழு, இரகசிய வாக்குச் சீட்டு மூலம் தேர்தலை நடத்தும். பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம், நேரம், நிகழ்ச்சி நிரல் ஆகியன ஒவ்வொரு பிரிவுச் செயலாளரினால் பங்கு பற்றத் தகுதி வாய்ந்த உறுப்பினர்களுக்கு 20 03 — 1994க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படும்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
கௌரவ செயலாளர்;

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
08-01-1994. (சி-6948)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தெற்கின் புதைகுழிகள்

தென்னிலங்கையில் மனித புதைகுழிகள் விவகாரம் நாளாந்தம் சூடு பிடித்து வருகிறது. அதனால் அரசுக்கான நெருக்கடியும் அதிகரிக்கிறது. அங்கு எழுந்துள்ள மக்கள் கொதிப்பை எவ்வாறு அடக்குவது என்பது தெரியாமல் அது திணறுகிறது!

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வரை 26 மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்ட, சூரியகந்த மலைக் குன்றில், 300க்கும் மேற்பட்டவை புதைக்கப்பட்டிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே போல தெற்கின் பல பகுதிகளிலும் வேறு பல மனித புதை குழிகள் இருக்கக் கூடும் என்ற ஊகங்களும் எழுந்துள்ளன.

1988, 1989இல் தீவிரமாகியிருந்த ஜனதா விமுக்திப் பெரமுனவின் (ஜே. வி. பியின்) அரசுக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்கு, பிரேமதாசா அரசு, சிங்களவர்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அராஜகமும், இராணுவ அடக்கு முறையும் அகில உலகத்துக்கும் பிரசித்தமான ஒன்று.

ஈழத் தமிழர்கள் மீது சிங்கள அரசாங்கங்கள் அடக்கு முறையையும், அராஜகத்தையும் கட்டவிழ்த்து படுகொலைகள் புரிந்த போது, சிங்கள மக்கள் இனவாதக் கண்ணுடன் பார்த்து வாய் பொத்தி நின்றனர். தமிழர்கள் மீது இராணுவ அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விடுவதனால் அவர்களை அழித்துத்தொல்லையை நீக்கி விடலாம் என்று மகிழ்ந்த சிங்களவரும் உள்ளனர்.

ஆனால் ஜே. வி. பி. கிளர்ச்சியை அடக்குவது என்ற போர்வையில் இராணுவ அட்டூழியமும், மரண அதிரடிப் படைகளின் அட்டூழியமும் அவர்களையே பதம் பார்த்த போது பதற்றமடைந்தனர். அரச அட்டூழியத்துக்கு எதிராகச் செயற்பட முடியாதவர்களாக, குரல் கொடுக்க முடியாதவர்களாகச் செயலிழந்து வெறும் ஒப்பாரி வைக்கவே அவர்களால் முடிந்தது.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின்னர் வடக்கு - கிழக்கில் அரசாங்கம் — அரச படைகள் — அப்பாவித் தமிழ் மக்களை குண்டு வீச்சு, எறிகணை வீச்சு, ஹெலித் தாக்கு என்று கொன்று குவிக்கும் போதும் அதற்கு எதிராகக் குரல் எழுப்ப சிங்கள மக்கள் முனையவில்லை.

இப்போது தெற்கில் புதை குழிகள் கண்டு பிடிக்கப்படும் போது மீண்டும் அவலக்குரல் எழுப்புகின்றனர். இவ்வருடத்தில் நடக்க இருக்கும் தேர்தல்களை முன்னிட்டு எதிர்க்கட்சியினர் தமக்கு ஆதரவு தேடுவதற்காகவே புதை குழிகள் விடயத்தை அம்பலப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் கருத இடமுண்டு.

மேலும் அரசாங்கத்தினால் அவமானப்படுத்தப்பட்ட முன்னாள் மூத்த இராணுவ அதிகாரியே, புதை குழிகள் சம்பந்தமான துப்பினை, மூன்றாம், நான்காம் பேர் வழிகள் ஊடாக எதிர்க்கட்சியினருக்குக் கொடுத்திருக்கலாம் என்று எண்ணவும் இடமுண்டு.

எவ்வாறெனினும் இவ்விவகாரம், தென்னிலங்கை மட்டத்திலும், வெளி உலக மட்டத்திலும் அரசுக்கு மிகப் பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் என எதிர்பார்க்கலாம்;

இந்தக் கட்டத்திலேனும் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதற்காக அவர்கள் மீது இராணுவ அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதையும், அவர்கள் கொன்றொழிக்கப்படுவதையும் எதிர்த்து சிங்களப் பொது மக்கள் குரல் கொடுப்பார்களா என்ற கேள்வியை எழுப்ப விரும்புகிறோம்!

தனக்கு வந்தால் தான் தலையிடி, மற்றவர்களுக்கு வந்தால் அது நோயல்ல என்ற நிலைப்பாட்டையே சிங்கள மக்கள் தொடர்ந்தால்—

1988, 1989 ஆம் ஆண்டுகள் மீண்டும் தங்களுக்கு வரும் என்பதனை மறந்து விடலாகாது. அதனை உணர்ந்து திருந்துவார்களா...? இல்லை ......!

# ரூ. 50 கோடி நவீன ஆயுதங்களை இழந்ததால்
# புலிகளை எதிர்கொள்வதற்கு சிப்பாய்கள் அச்சம்

"யுத்தம் வேண்டாம்; பேச்சுக்குப் போங்கள்! தென்பகுதியில் இன்று ஒலிக்கும் கோஷம்!! என்ற தலைப்பில் 29-12-93 உதயனில் வெளியான கட்டுரையின் மிகுதி கீழே பிரசுரமாகியுள்ளது.

### வாட்டர் ஜெட்

44 அடி நீளமான வாட்டர் ஜெட் படகு மணிக்கு 26 கடல் மைல் வேகத்தில் செல்லக்கூடியது.

இதில் 12.7 மி. மீ இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஆழம் குறைந்த கடலிலும் சர்வ சாதாரணமாக இது செல்லக் கூடியது.

கிளாலி ரோந்துப் பணியில் அதிகளவில் இந்தப் படகுகளே கடற்படையினரால் ஈடுபடுத்தப்பட்டுவந்தன. இவற்றில் 7 படகுகள் கடற்படையினரிடம் இருந்தன.

இவற்றில் ஒன்றை ஆகஸ்ட் மாதத்தில் கிளாலி மோதல் ஒன்றிலும்—

மேலும் ஐந்தை பூநகரித் தாக்குதலிலும்— புலிகள் கைப்பற்றி விட்டனர். இதனால் இப்பொழுது ஆழம் குறைந்த பகுதிகளில் ரோந்து செய்யமுடியாத நிலையில் கடற்படையினர் இருந்து வருகின்றனர். இவற்றை அவசரமாக வாங்குவதற்கு அரசு தற்போது ரெண்டர் அழைப்பு விடுத்துள்ளது.

### 50 கலிபர்

50 கலிபர் இயந்திரத் துப்பாகியினால் சுடக்கூடிய ஆகக்கூடிய தூரம் 6 கிலோ மீற்றர் ஆகும். நிச்சயமான சேதத்தை ஏற்படுத்தக்கூடிய தூரம் 1830 மீற்றர். இவற்றில் இருந்து வினாடிக்கு 450 முதல் 500 குண்டுகள் வெளியேறும்.

ஹெலிக்கொப்டர்கள், குண்டுவீச்சு விமானங்கள், கடற்படைக் கப்பல்கள் என்பனவற்றில் இந்த துப்பாக்கிகளே பொருத்தப்பட்டுள்ளன.

பூநகரியில் மட்டும் 11க்கு மேல் இந்தவகை துப்பாக்கிகளை படையினர் இழந்து விட்டனர். இது தவிர மண்கிண்டிமலை, கட்டைக்காடு போன்ற தாக்குதல்களிலும் இவற்றில் பல படையினரால் புலிகளிடம் இழக்கப்பட்டு விட்டன.

### ராடர்

எதிரியின் படகு நடமாட்டங்களையும்— சககடற்படை படகுகளின் நடமாட்டங்களையும்— அறியவென பொருத்தப்பட்ட நவீன சாதனங்களே ராடர் சாதனங்களாகும்.

இவை பருத்தித்துறை "டோறா" பீரங்கிப்படகுத் தாக்குதலிலும், பூநகரித் தாக்குதலிலும் புலிகள் கையில் போய்விட்டன.

இதனால் தற்போது கடலில—கடற்படை படகுகளின் நடமாட்டம் அனைத்தையும் புலிகள் அறிந்துகொள்ள முடியும்.

இந்த நவீன ராடர் சாதனங்களில் நான்கு பூநகரியில் இருந்து புலிகளால் கைப்பற்றப்பட்டு விட்டன.

### 40 - R P G றொக்கட்லோஞ்சர்

40-மி. மீ. விட்டம் உள்ள றொக்கட் ஏவும் இந்த ரக றொக்கட்லோஞ்சர்கள் 85மி. மீ. றொக்கெட்டுக்களை ஏவக் கூடியவை.

இவை சுமார் 500 மீற்றர் வரை சென்று டாங்கிகளைக் கூட தாக்கி அழிக்கக்கூடியவை. இவை இலக்குத் தவறாமல் தாக்கக்கூடிய தொலை நோக்கிகளைக் கொண்டவை. இவற்றில் 19ஐ பூநகரியில் படையினர் இழந்துவிட்டனர்.

இவை தவிர நூற்றுக்கணக்கான இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகள், றொக்கட் ஏவுகணைகள், பீரங்கிக் குண்டுகள் இத்தியாதிகள். இவை எல்லாம் புலிகள் வசம் போயிருப்பது தென்பகுதியின் பத்திரிகைகளை எதிர்க்கட்சிகளை அரசையும், படைகளையும் நோக்கி பாய வைக்கிறது.

முன்னாள் எயர் வைஸ் மார்ஷலான் ஹரி குணதிலக்க கொழும்புப் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில் "முன்னர் 20 அல்லது 30 ஆயிரம் படையினர் இருந்த போது நாம் நன்றாகக் கடமையாற்றினோம். இப்பொழுது 80 முதல் 90 ஆயிரம் படையினர் உள்ளனர். சிறந்த யுத்த டாங்கிகள், புக்காரா போன்ற விமானங்கள், டோறா அதிவேகப் படகுகள் எல்லாம் இருந்தும் நாங்கள் அடித்துப் பிடிக்கும் நிலையில் இல்லை. புலிகள் எம்மை அடித்து கலைக்கும் நிலையில் உள்ளனர் என்கிறார்.

இன்னொரு புறத்தில் ஸ்ரீலங்காவின் தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியனவற்றின் அமைப்பை முற்றுமுழுதாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

இராணுவத்தினரின் சக்தி வாய்ந்த தொலைத் தொடர்புகளும், ஆயுதங்களும் புலிகளிடம் உள்ளன. ஆகாயப் படையினரிடம் தற்பொழுது உள்ள குண்டுவீச்சு விமானங்கள் 6 ஆயிரம் அடிக்கு கீழே வந்துதான் குறிப்பிட்ட இலக்கை தவறாமல் தாக்கக் கூடியவை. ஆனால் அவை 6 ஆயிரம் அடிக்கு கீழே வர முடியாத அளவுக்கு எதிர்த்துக் தாக்கக்கூடிய ஆயுதங்கள் புலிகளின் வசம் உள்ளன.

கடற்படையின் அதி நவீன ராடர்களும், நீரூந்து விசைப் படகுகளும் புலிகளிடம் போய் விட்டன. இவை கடற்படை நடமாட்டத்தையே காட்டிக் கொடுத்துவிடக் கூடியன. இந்த நிலையில் முப்படைகளினதும் கட்டமைப்பையே மாற்ற வேண்டும் என்ற கோஷம் தெற்கில் எழுந்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பிரிகேடியர் ஒருவர் (தற்பொழுது தனியார் கம்பனி ஒன்றில் வேலை செய்பவர்) சொல்கிறார். "ஸ்ரீலங்கா படைத் தளபதிகள் எல்லாம் அதிகாரிகளாக செயல்படவில்லை. ஆயுத வியாபாரிகளாகவே செயல்படுகிறார்கள். படையினருக்கு எந்த ஆயுதம் தேவை? தரத்தில் சிறந்தது எது? என்பதெல்லாம் பார்க்காது தமக்கு எந்த ஆயுதங் கொள்வனவால் கமிஷன் கூடுதலாகக் கிடைக்குமென்றே பார்க்கிறார்கள். அதனால்தான் இந்த தோல்விகள் எல்லாம்" என்கிறார்.

இவ்வாறாக பலரினதும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டிருக்கும் நிலையில் ஸ்ரீலங்கா அரசு, படையினரின் சொர்சுடன் மேலும் பல புதிய விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், டாங்கிகள் என்பவற்றை வாங்க ஆயுத்தமாகிக் கொண்டிருக்கிறது.

ஆனால் "அவை எல்லாம் வேண்டாம். புதிதாக வாங்கி புலிகளிடம் தாரைவார்க்கவா போகிறீர்கள். சமாதானமாக பிரச்சினையைத் தீருங்கள்". என்கின்றன தென்பகுதிப் பத்திரிகைகள்.

இதேவேளை, இதுவரை வாங்கிய ஆயுதங்கள், விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் என்பனவற்றில் மட்டுமல்ல, இனிமேல் வாங்கப் போகும் ஹெலிகள், கடற்படைப் படகுகள் என்பனவற்றிலும் வாங்கப்படுவதற்கு முன்னரே கோடிக்கணக்கான பணம் ஊழல் இடம்பெற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

### கைதிகளால் நெருக்கடி

இதேவேளை ஏற்கனவே புலிகளின் பிடியில் இருக்கும் போர்க் கைதிகளின் பெற்றோரும், பூநகரியில் காணாமற் போன அல்லது இறந்த படையினரின் பெற்றோரும் அரசுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கத் தொடங்கி விட்டனர்.

படையினர் தரப்பிலும் இந்தப் போர் மிகுந்த களைப்பையும், விசனத்தையும் ஏற்படுத்திவிட்டது.

உரிய ஆயுத வசதிகள் வழங்கப்படாதது, தேவையான உணவு இல்லாதது, ஆயுதப் பயிற்சி அற்றவர்களை முகாம்களுக்கு அனுப்பியது ஆகியவற்றால் பூநகரியில் காயம் அடைந்த படையினர் அரசு மீது கடும் கோபம் கொண்டுள்ளனர்.

தம்மை இராணுவ வைத்தியசாலைகளில் வைத்து பராமரிக்கும் விதம் பற்றியும் அவர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான உணவு, உடை, உறைவிட வசதிகள் போதுமான அளவில் வழங்கப்படவில்லை.

பூநகரியில் காயம் அடைந்த சிப்பாய்கள் பலருக்கு ராகம மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெறும் வைத்தியர்கள் மூலமே சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் காயம் அடைந்த ஒரு சிப்பாய்க்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படாததால் அவரது காலைத் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் — அந்த சிப்பாயின் கால் நான்கு தடவைகள் சிறிது சிறிதாகத் துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த சிப்பாய்களுக்கு கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் கட்டில்கூட வழங்கப்படவில்லையாம். நிலத்திலேயே மெத்தை போட்டு படுக்க வைக்கப்பட்டனர்.

ஆனால் 2 ஆவது மாடியில் சிகிச்சை பெற்று வந்த அதிகாரிகளுக்கு கட்டில் வசதியுடன் ரீ. வி. பார்க்கவும் வசதி செய்யப்பட்டிருந்தது.

இது பற்றி காயமடைந்த சிப்பாய் ஒருவர் "காவலரண்களிலிருந்து கால், கையை இழந்த எமக்கு படுக்க கட்டில்கூட கிடையாது. முகாமுக்குள் இருந்து நன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு கட்டில், மெத்தை, ரீ. வி. என ஆத்திரத்துடன் கூறி இருக்கிறார்.

காயமடைந்தவர்களைப் பார்க்க வந்த பிரதமரும், ஜனாதிபதியும் கூட சாதாரண சிப்பாய்களைப் பார்வையிடவே இல்லையாம். அவர்கள் கப்டன்மார்களையும், மேஜர்மார்களையுமே பார்த்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். இவைகளெல்லாம் இராணுவ நடவடிக்கைகள் மீது சிப்பாய்களை வெறுப்படையச் செய்திருக்கின்றன.

இதேவேளை தற்போது பதவி ஏற்றுள்ள ஜெரிடீ சில்வா கத்தோலிக்க மதத்தவர் என்பது மட்டுமல்லாமல் இவரது மனைவி தமிழ் குடும்பத்தை சேர்ந்தவர் என்பதும்—

ரகசியப் பொலீஸ் பிரிவின் உயர் அதிகாரியான ராஜபக்ஸவும் தமிழ்பெண் ஒருவரை மணந்த கத்தோலிக்கர் என்பதும்—

மேலும் பல படை உயரதிகாரிகள் கத்தோலிக்கர்களாகவே இருப்பதும் — சிங்கள மக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அதிகாரிகளின் குடும்ப, சமய சூழ்நிலைகளும், கட்டுப்பாடுகளும், கொள்கைகளும் ஒரு பௌத்த, சிங்கள நாட்டை கட்டிக்காக்க ஏற்றவைதானா என பௌத்த பிக்கு ஒருவர் கேள்வி எடுப்பியுள்ளார் என சிங்கள பத்திரிகையான 'யுக்திய' செய்தி வெளியிட்டுள்ளது.

இவை எல்லாம் தற்பொழுது ஸ்ரீலங்கா படையினர் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

### யுத்தத்தை நிறுத்தக் கோஷம்

இதனால்தான் யுத்தத்தை நிறுத்தக் கோரும் கோஷங்கள் தற்போது தெற்கில் ஒலிக்கத் தொடங்கி உள்ளன.

இதற்கான சில அமைப்புகள் ஊர்வலங்களையும், பொதுக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றன.

இந்தஊர்வலப்பதாகைகளில் காயமடைந்த, இறந்த படையினரின் படங்களும் கொண்டு செல்லப்படுகின்றன. யுத்த பாதிப்புகள் மக்களுக்கு விளக்கப்படுகின்றன "யுத்தத்தை நிறுத்து" எமது "இளைஞர்களை வாழவிடு" "வருங்கால சமுதாயத்தை அழிக்காதே" என்ற கோஷங்களுடன் தமிழர்களும் மனிதர்கள்தான் என்ற கோஷமும் சேர்ந்து ஒலிக்கின்றது.

மொத்தத்தில் தென் பகுதியில் மாற்றம் ஏற்பட தொடங்கி விட்டது.

இளவேந்தன்

# முப்படைகளின் சட்டமைப்பை மாற்றுமாறு கோரிக்கை

# கிளிநொச்சியில் வெள்ளம் ஏற்படுத்திய பெரும் பாதிப்பு

## நகரில் மட்டும் 90 சதவீதமானோர் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், ஜன. 11

சென்ற வருட இறுதியில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலர் பகுதிகளில் இருந்தும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேற்கண்ட தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குளங்கள், அணைக்கட்டுகள், வீதிகள் பாலங்களுக்கு வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேதம் மட்டும் 90 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

80 சத வீதமான மேட்டு நில பயிர்களும், 25 சத வீதமான நெல்வயல் நிலங்களும் பாதிப்புக்கு உள்ளாகின.

வெள்ளத்தால் 12 அயிரம் குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன. கோயில்களிலும், பாடசாலை போன்ற பொது இடங்களிலும் தஞ்சமடைந்தவர்களுக்கு 17 லட்சம் ரூபா செலவல் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து 90 சத வீதமானவர்கள் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தனர்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவுவதில் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டிருந்தன. பாய், படுக்கை விரிப்பு, சமையல் பாத்திரங்கள் போன்றன அவர்களால் வழங்கப்பட்டிருந்தன.

தற்போது வெள்ளநிலைமை குறைந்துள்ளதால் வீடுகளை இழந்தவர்களைத்தவிர ஏனையோர் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் தற்போது அந்தந்த திணைக்களங்களால் மதிப்பிடப்பட்டு வருகின்றன. இவை முழுமையாக மதிப்பிடப்பட்டதும் இது சம்பந்தமான அறிக்கை கொழும்பு தலைமைக் காரியாலயங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

உணவுக் கையிருப்பை பொறுத்த மட்டில் கிளிநொச்சியில் நாட்டு அரிசி போதுமான அளவில் இருக்கின்றது.

கோதுமை மாவும் ஓரளவு உள்ளதால் இவற்றை வவுனியா ஊடாக தரை மார்க்கமாக எடுத்து வருவதில் தற்போது காலநிலை சீராக இருப்பதால் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-162)

## றோட்டரக்ட் செயற்திட்டம்

யாழ்ப்பாணம் சிற்றூர்திகள் தரிப்பு நிலையத்தின் முன்பாகத்தை அழகுபடுத்தும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் றோட்டரக்ட் கழகம் கடந்த 5 ஆம் திகதி செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியது. (க)

## ஆசிரியர் ஒன்றுகூடல்

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கத்தோலிக்க சமயம் போதிக்கும் பயிலுனர், தொண்டர் உட்பட சகலருக்கும் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒன்றுகூடலும் செயலமர்வும் நடைபெறும். (க)

# வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்

## இதுவே கல்வியின் நோக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 11

"வாழ்க்கையின் சவால்களுக்குத் துணிவுடன் முகங்கொடுக்க இளைஞர்களைத் தயார் செய்வதே கல்வியின் பிரதான நோக்கமாகும்"

யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கொககுவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ மகேந்திரன் தலைமையில் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விடுமுறைக் கால அறிவியல் அரங்கில் உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது!

அறிவை அதிகரிப்பது; செயல்திறனை உருவாக்குவது; சமூகத்தின் [illegible] யத்தையும் [illegible] யும் அடுத்த தலைமுறைக்குக் கொடுத்தல்; தொழில் நுட்பங்களையும் சமூக முறைமைகளையும் கற்றல்; ஆளுமையை உருவாக்குதல்; வாழ்க்கைக்கு முகங்கொடுக்கும் நிலைமைக்கு இளைஞர்களை மாற்றுதல் — இவையே கற்றலின் குறிக்கோளாகும்.

இவ்வறிவியல் அரங்கில் நிறைவுரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த திரு. வே. பாலகுமார் பின்வருமாறு கூறினார்.

அடிமையாய் வாழ்பவனுக்கு எந்த உரிமையும் கிடையாது. அடிமைத்தளையை அறுக்க வேண்டும். அதற்காக ஒரு சந்ததி போராடிக் கொண்டிருக்கிறது.

நாம் எம் முன்னால் [illegible] அவற்றுக்கும் அறிவியல் ரீதியாகக் கருத்தூட்டப்படுகிறது. போர்க்கலையும் அறிவியல்ரீதியானதே. ஆயுதம் தயாரிக்கும் அளவுக்கு அறிவும் ஆற்றலும் தேவை.

இவ்வரங்கின் காலை நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தலைமை வகித்தார்.

அருட்திரு. சா. ம. செல்வரட்ணம் அடிகளார், திரு. க. குணராசா, திரு. க. சி. குகதாசன் ஆகியோரும் கருத்துரை வழங்கினார்கள்.

"நங்கூரம்" இதழால் ஒழுங்கு செய்யப்பட்ட அறிவியல் அரங்கில் சூழல் அவதானிப்புத் திறன் பயிற்சியும் இடம்பெற்றது. இதில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்களை திரு வே. பாலகுமார் வழங்கினார். (க-111)

# யாழ்ப்பாணத்தில் 33 பேர் கொலராவுக்கு பலியாகினர்

யாழ்ப்பாணம், ஜன. 11

யாழ் குடாநாட்டில் வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியில் இதுவரை 33 பேர் கொலரா நோய்க்கு பலியாகி உள்ளனர். ஆயிரத்து 39 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக பார்க்குமிடத்து, மானிப்பாயில் 253 பேர் பாதிக்கப்பட்டனர். 14 பேர் இறந்துள்ளனர்.

சாவகச்சேரியில் 120 பேர் பாதிக்கப்பட்டனர், 4 பேர் இறந்தனர். பருத்தித்துறையில் 120 பேர் பாதிக்கப்பட்டனர் 4 பேர் இறந்தனர். கோப்பாயில் 148 பேர் பாதிக்கப்பட்டனர். 4பேர் இறந்தனர். யாழ் மாநகரசபை பிரிவில் 390 பேர் பாதிக்கப்பட்டனர். 3 பேர் இறந்தனர். தெல்லிப்பளை, உடுவிலில் 115 பேர் பாதிக்கப்பட்டனர், 4 பேர் இறந்தனர். (க-162)

# ஸ்கந்தவரோதயா நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜன 11

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை யொட்டி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் மற்றும் சங்கங்களும் இணைந்து பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளன.

இவ்வாண்டு நடத்த உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சிகளில் சில வருமாறு:-

★ கல்லூரியையும் முன்னோடிகளையும், தாபகரையும், இணைந்து உழைத்தோரையும் வாழ்த்தி பாராட்டிபோற்றி நினைவு கூரல்.

★ 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இவ்வாண்டு இறுதித் தேர்வில் திறமைச் சித்தி பெற்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு அமரர் சரா சேது காவலர் நினைவாகப் புலமைப் பரிசில் வழங்கல்.

★ கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் திறமைச்சித்தி பெறும் மாணவர்களுக்கு ஆண்டு 11 வரை புலமைப் பரிசில் வழங்கல். (இ-3)

வடமராட்சி கிழக்கு

# ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கப்படும் என அறிவிப்பு

வடமராட்சி, ஜன. 11

வடமராட்சி கிழக்குப் பிரதேச பாடசாலைகளில் மூன்று, நான்கு ஆண்டுகள் சேவை புரிந்த ஆசிரியர்கள் தமது சொந்த இடங்களுக்கு மாற்றம் செய்யப்படுவார்கள் என யாழ். வடக்கு கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தெரிவித்தார்.

அதே நேரம் இப்பிரதேசத்தில் கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்களுக்கு இப்பிரதேச பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(க-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற
சைவசமய விவகாரக் குழு

## காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதிசுவாமிகள்
## நினைவுப் பிரார்த்தனை 12-01-94



தலைவர்: திரு. வே. பொ. பாலசிங்கம்
யாழ். மாநகர ஆணையாளர்
காலம்: 12 - 01 - 94 புதன்கிழமை
பிற்பகல் 3. 00 மணி
இடம்: நாவலர் கலாசார மண்டபம்

நிகழ்ச்சிகள்

பிற்பகல் 3 00 — வழிபாடு —
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள்
3 15 — கீதாஞ்சலி —
சங்கீத வித்துவான் இசைக்கலைமணி திருமதி மிதிலா விவேகானந்தன் அவர்கள்
4 15 — உரை —
மூதறிஞர் க. சி குலரத்தினம் அவர்கள்
5.00 — நன்றியுரை.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்.

செயலாளர்,
சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-01-1994. (சி/6951)



## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை சுன்னாகம்

க. பொ. த உயர்தர வகுப்புகள்
**16-01-1994** முதல் ஆரம்பம்
**(1996)**

தமிழீழ பொதுக் கல்விப் பெறுபேற்றின் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்

கணிதத்துறை, உயிரியல்துறை
வர்த்தகத்துறை

| கலைத்துறை | | பாடங்கள் |
|---|---|---|
| இந்துசமயம் | — | அளவையியல் |
| இந்துநாகரீகம் | — | நாடகமும், அரங்கியலும் |
| தமிழ் | — | புவியியல் |
| அரசியல் | — | பொருளியல் |
| வர்த்தகம் | — | சங்கீதம் |
| ஆங்கிலம் | — | ஆங்கில இலக்கியம் |

(சி-2058)



## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

16 ஆவது வணிகஜோதி மலர் வெளியீட்டு நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு பெறும் இலக்கம் | — 2920 |
| 2 ஆம் ,, ,, ,, | — 2827 |
| 3 ஆம் ,, ,, ,, | — 1206 |

ஆறுதல் பரிசு பெறும் இலக்கங்கள்:
3748 2956 362

இவர்களுக்கான பரிசில்கள் 16 ஆவது வணிகஜோதி வெளியீட்டு விழாவின் போது வழங்கப்படும்.

வர்த்தக மாணவ மன்றம்
யா/கனகரத்தின ம.ம வி (28881)



கொக்குவில்
இந்து மயான அபிவிருத்திச் சபை

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:- நாமகள் வித்தியாசாலை, கொக்குவில்
காலம்:- 30 — 01 — 1994 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- பி. ப. 3 00 மணி

குறிப்பு:-
★ பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் 21-01-94 இற்குமுன் எழுத்து மூலம் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்
★ அங்கத்தவர்கள் அனைவரும் கூட்டத்திற்குத் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

தலைவர்
பொ யோகலிங்கம்
பொற்பதி வீதி,
கொக்குவில்.

செயலாளர்
சி மாதவகுமாரன்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(28883)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 01 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பிரதேச செயலர்கள் இடமாற்றப் பட்டியல்

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் சிலவற்றுக்கு பிரதேச செயலர்கள் மற்றும் உதவி பிரதேச செயலர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இது தொடர்பான இடமாற்றப் பட்டியலை வடக்கு கிழக்கு மாகாணசபை வெளியிட்டுள்ளது.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த இடமாற்றங்கள் அமுலுக்கு வருகின்றன. அதன்படி இடமாற்றம் பெற்றுள்ளோர் விவரம் வருமாறு,

★ திரு. எஸ். சந்திரராஜா - பிரதேச செயலர்/ மேலதிக அரச அதிபர் — சங்கானை
★ திரு. ரி. வைத்திலிங்கம் - பிரதேச செயலர்/ மேலதிக அரச அதிபர் சண்டிலிப்பாய்
★ செல்வி. ஆர். கனகரத்தினம்— உதவி பிரதேச செயலர், சண்டிலிப்பாய்,
★ திருமதி. கமலா சிவசிதம்பரம் — பிரதேச செயலர்/ மேலதிக அரச அதிபர் நல்லூர்.
★ திரு. எல். இளங்கோவன் — உதவி பிரதேச செயலர் நல்லூர்.
★ திரு. எ. மகாலிங்கம்— பிரதேச செயலர்/ மேலதிக அரச அதிபர், உடுவில்.
★ செல்வி. ரி. தணிகாசலம் — உதவிச் செயலர், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி, கலாசார, விவகார விளையாட்டுத்துறை அமைச்சு.
★ திரு. எச். ஜோசப் — உதவிப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு மாகாண சபை திட்ட பிரதி செயலாளர் அலுவலகம். (உ-3-17)

2 மாணவரின்---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மண்டை ஓடுகளும் அவர்களின் பல்வரிசைகளின் மூலமே அடையாளங் காணப்பட்டன.

இதன் மூலம் எம்பிலிட்டியவில் கடத்தப்பட்டு காணாமற் போயிருந்த மாணவர் இருவரின் மண்டை ஓடுகள் சூரியகந்த புதைகுழிகளில் இருந்து பெறப்பட்டுள்ளன என்பது தெளிவாகியுள்ளது.

எம்பிலிப்பிட்டிய நீதிவான் பியசேன ரணசிங்காவின் மேற்பார்வையில் அடையாளங் காணும் பணி நடைபெற்றது. முறைப்பாட்டாளர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஜே. பிரேமரத்தினா, ஹேமந்த கமகே, பவித்திரா வன்னியாராச்சி ஆகியோர் நீதிமன்றத்துக்கு உதவினார்கள்.

அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் 17ஆம் திகதி இடம் பெறும்.

## புக்காராவினால் சாவகச்சேரியில் பரபரப்பு

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று புக்காரா விமானங்கள் பறந்தபோது பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இரு புக்காரா விமானங்கள் அருகருகே பறந்து வந்து நகருக்கு மேலால் பிரிந்து இரு பக்கமாகச் சென்றன.

புக்காரா விமானங்கள் வந்தபோது நகரப் பகுதியில் நின்ற பொது மக்களும், வர்த்தகர்களும் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். (இ-117)

## மற்றவர்களின்..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யில் உருவான கருத்து வேறுபாட்டை அடுத்து அவர் தாமாக ஓய்வு பெறும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டதும் தெரிந்தவையே.

இராணுவ விசாரணை அறிக்கை குறித்து கருத்து வெளியிட்ட அவர் —

யேசுநாதரைப் போல அடுத்தவர் விட்ட தவறை தாம் பொறுப் பேற்க வேண்டி ஏற்பட்டதாகவும் சொன்னார்.


## பொதுக்கூட்டம்

இன்று (11 - 1 - 94) செவ்வாய்க்கிழமை காலை 10 30 மணிக்கு சகல சித்தமருத்துவ மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் கைதடியில் நடைபெறவுள்ளது.

செயலாளர்,
சித்தமருத்துவ மாணவர் மன்றம்.
(28879)



## தேவை

அஸ்பெஸ்டஸ் சீற், கூரைத் தகரங்கள் தேவை. நல்ல தரத்தில் வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-
முகாமையாளர் (ஆளணி நிர்வாகம்),
உதயன்,
யாழ்ப்பாணம்.
(சி/6950)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்:
27 — 01 — 1971

விண்ணில்:
28 — 11 — 1993



சண்முகநாதன் குகானந்தன்
( குகன் )

இன்று நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

சிவசக்தி இந்து இளைஞர் மன்றம்,
திருநெல்வேலி.
(28882)

சட்டத்தரணி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

சங்குபால விகாரைக்கும் தேவாலயத்திற்கும் இடையில் தமது காரை தாம் நிறுத்திய போது எதிர்த்திசையிலிருந்து வந்த வெள்ளை நிற டெலிக்கா வாகனத்திலிருந்து தமது காரை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தாம் காரின் ஆசனத்தின் கீழ் குந்தியிருந்து தப்பிக் கொண்டதாகவும் அவர் சொன்னார்.

நேற்று முற்பகல் எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் எலும்புக் கூடுகளை அடையாளம் காணும் நடவடிக்கை இடம் பெற்றபோது, நீதிமன்ற வளவில் காணப்பட்ட ஒருவரே பின்னர் தம்மை நோக்கிச் சுட்டார் என்றும் அவர் கூறினார்.

இச்சம்பவம் பற்றி அவர் நேற்று கொடகவெல பொலீஸில் முறைப்பாடு செய்தார்.

எம்பிலிப்பிட்டிய கொலைச் சம்பவங்களுடன் தொடர்புள்ளவர்கள் இத்துப்பாக்கிச் சூட்டின் பின்னணியில் இருப்பதாகத்தான் நிச்சயமாக நம்புவதாக இன்னொரு சட்டத்தரணி திருமதி பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார். (உ-எ-6)

6ஆவது. .
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டத் தளபதி திரு. அப்பாச்சியும் திறந்து வைத்தனர்.

முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. ஜெமினி, தமிழீழ அரசியல் துறை, நடுவப் பணியக வன்னிப் பெருநிலப் பரப்பு துணைப் பொறுப்பாளர் திரு. மதன் ஆகியோர் உட்படப் பலர் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டனர்.

மனித...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இரகசியமாக வேறு இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டது என்பதை நம்புவதற்கான காரணங்கள் உண்டு என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் பெருந்தொகையான ஆட்கள் புதைக்கப்பட்டுள்ள வேறு புதைகுழிகள் உள்ளன என்று தமிழர் விடுதலைக் கூட்டணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இப்புதைகுழிகள் பற்றி விசாரணை நடத்த ஐ. நா. குழு ஒன்றை அரசு அழைக்க வேண்டும் என்றும் கூட்டணி கோரியுள்ளது. (உ-எ)

செல்லச்சாமி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இ. தொ. கா. தலைவர் தொண்டமானின் முடிவுக்கு எதிராக —ஆளும் ஐ. தே. கட்சியை ஆதரித்து — செயற்பட்டு வருகிறார் என்பது தெரிந்ததே. (உ-5)


## மலைவேம்பு ஏலவிற்பனை

யாழ். பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலய முன்றலில் தறிக்கப்பட்ட மலைவேம்பும் அதனது கொப்புகளும் (ஏறக்குறைய 40 கனஅடி மரம்) ஏலவிற்பனைக்குண்டு. ஏலவிற்பனை தொகுதி தொகுதியாக மேற்கொள்ளப்படலாம்.

ஏலவிற்பனை 1994 - 01 - 15 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். மரம் வாங்குபவர்கள் அன்றே அதன் பெறுமதிப் பணத்தினைக் கட்ட வேண்டும். கொள்வனவு செய்யும் மரத்தினை 1994-01-16 ஆம் திகதி மாலை 4-00 மணிக்கு முன் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து அகற்றுதல் வேண்டும். தறித்த மரத்தினை அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

யாழ். பல்கலைக்கழக,
ஸ்ரீ பரமேஸ்வரன்
ஆலய
மஞ்சத் திருப்பணிச்
சபை.
[சி-6945]


# பேக்கரிகளுக்கு மா விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 11

நேற்று முன்தினம் மாஹோ கப்பலில் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்ட மா, முன்னுரிமை அடிப்படையில் யாழ். மாவட்ட பேக்கரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாணுக்கு இருந்து வரும் தட்டுப்பாட்டை நீக்குவதே இதன் நோக்கம் ஆகும்

யாழ். மாவட்ட திட்டப் பணிப்பாளரால் 2 லட்சத்து 20 ஆயிரம் கிலோகிராம் மா பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் —

எனினும் இந்த தொகை ஒரு வாரத்துக்கு மட்டுமே போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் 145 பேக்கரிகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (இ-162)

# படைத் தலைமையகத்தில் புதிய தொடர்பு அதிகாரி

இராணுவ செயலகத்தில் இதுவரை காலமும் பிரத்தியேகமாக இயங்கி வந்த வெகுஜனத் தொடர்புப் பிரிவை புதிய இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா கலைத்திருக்கிறார்.

இதேவேளை பாதுகாப்பு அமைப்பின் செயற்பாட்டுத் தலைமையகத்தின் தொடர் அதிகாரியாக பிரிகேடியர் நெமுனு குணதுங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ செயலகத்தின் வெகுஜனத் தொடர்பு பிரிவு கலைக்கப்பட்டதை அடுத்து இதுவரை காலமும் அங்கு தொடர்பு அதிகாரியாகப் பதவி வகித்து வந்த பிரிகேடியர் நளின் அங்கம்மன இராணுவ செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (உ 5)

## மரண அறிவித்தல்கள்

வித்துவான்
### சின்னத்தம்பி குமாரசாமி
(நயினாதீவு)
(முன்னாள் விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி)

நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வித்துவான் சி. குமாரசாமி 8 - 1 - 1994 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கனகம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், சிவகுமார் (டாக்டர் நியூயோர்க்), சிவனேசன் (லண்டன்), வத்சலா, இளங்கோ (டாக்டர்), கௌசல்யா (சுவிஸ்), வாசுகி (லண்டன்), நந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமா (நியூயோர்க்), திலகேஸ்வரி (லண்டன்), உதயகுமார், சுமதி (டாக்டர்), ஸ்ரீதரன் (சுவிஸ்), சோமசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களாகிய வள்ளியம்மை, இராசம்மா, கதிரவேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரலிங்கம், கோபாலசுந்தரம், (கனடா), குலசிங்கம் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. சுந்தரலிங்கம்
(மைத்துனர்)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி, (28876)

### திருமதி அனுஷம்மா தருமலிங்கம்

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொட்டடி நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுஷம்மா தருமலிங்கம் 04 - 01 - 94 இல் திருச்சியில் காலமானார். இவர் அமரர் தருமலிங்கத்தின் அன்பு மனைவியும், சோமநாதபிள்ளை, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், திருமதி நாகம்மா (அவுஸ்திரேலியா), அமரர் திரு. கந்தையா - திருமதி பராசக்தி (திருச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விநாயகமூர்த்தி (பொறியியலாளர் புகையிரத திணைக்களம் கொழும்பு), தியாகராசா (பிரான்ஸ்), பிரபாவதி (திருச்சி), திருச்செல்வம் (கொழும்பு), திருமதி மணிமேகலை (U K ), சிவபாலன் (பிரான்ஸ்), ராஜேஸ்வரன் (U. K), ராஜேஸ்வரி (பிரான்ஸ்), பிரேமா (திருச்சி) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி வி. சிவகாமசுந்தரி (கொழும்பு), திருமதி தி கலைவாணி (பிரான்ஸ்), திரு. பஞ்சாட்சரம் (U. K.), திரு. கோணேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சுரேந்திரன், சுகேந்திரன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், அமரர் கதிரவேலு, திருமதி க. சாரதாம்பாள், திரு. சோமசுந்தரம்(திருச்சி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் திருச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சா. கந்தையா
(மைத்துனி)

32/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
11 - 01 - 94 (28884)

### திருமதி விஜயரட்ணம் சின்னம்மா

காங்கேசன்துறை குரு வீதியைச் சேர்ந்தவரும் வேளாதோப்பு கல்வியங்காட்டை வதிவிடமாக கொண்டவருமான திருமதி விஜயரட்ணம் சின்னம்மா 10-01-94 திங்கட்கிழமை காலமானார்.

இவர் ஓய்வு பெற்ற விஜயரட்ணம் (R.M.P) அவர்களின் அன்புமனைவியும், நல்லநாயகி, திருமதி புஷ்பநாயகி ஸ்ரீகுமரன் (U.S.A), திருமதி DR. ரஞ்சிதநாயகி சிவகுமாரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், DR . ஸ்ரீகுமரன் (U S A), DR. சிவகுமாரன் (U.K) ஆகியோரின் மாமியும், மயூரன், உமாசுதன், தினேஷ்குமார் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், அப்பாத்துரை (சிங்கப்பூர்) பொன்னம்மா (அவுஸ்திரேலியா) ராசமணி, கணேசபிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்ற தர்மலிங்கம், துரைசிங்கம் [அவுஸ்திரேலியா], முத்துலிங்கம், DR. ராஜலிங்கம், அருந்தவநாயகி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு [11-01-94] இன்று 10 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
DR .K . விஜயரட்ணம்
[கணவர்]
நல்லநாயகி
[மகள்]

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
[28878]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org